# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते


பயிலரங்க எண்ணிக்கை:119 நாள்: 22.04.2026

## கலை மற்றும் கட்டடவியல் புலம்

நடத்தும்

# தமிழிசையின் தொன்மையும் மரபுத் தொடர்ச்சியும்
# The ancientness glory and tradition of Tamil music

## பயிலரங்கம் – 01

## (14.05.2026 - 20.05.2026)

## அறிவிப்பும் அழைப்பும்

மனித நாகரிகத்தின் மாண்பிற்கு அடிப்படைக் காரணிகளாக மொழிவளமும், அதன்வழி தோன்றிய நுண்கலைகளும் அடிப்படையாகத் திகழ்கின்றன. ஆய கலைகள் அறுபத்து நான்கனுள், சீர்படுத்தி வகுக்கப்பெற்ற நுண்கலையான இசைக்கலையானது, உலக உயிர்களுக்கெல்லாம் புத்துயிர் அளிப்பதாகவும், பொதுப் பண்புகளைக் கொண்டதாகவும் திகழ்கிறது. அவ்வகையில் தமிழிசையானது பழந்தமிழர்களின் பண்பாடு, வாழ்க்கை முறை மற்றும் உணர்வுகளோடு ஒன்றிய மிகத் தொன்மையான இசை மரபாகும்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுள் ஒன்றாகப் போற்றப்படும் தொல்தமிழிசைக் கூறுகளில், தமிழர்களின் கலை, நாகரிகம், பண்பாடு, மொழி போன்றன உயர்ந்தோங்கிக் காணப்படுகின்றன. தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே தமிழில் பாக்களை இயற்பாக்கள் என்றும், இசைப் பாக்கள் என்றும் வகைப்படுத்துவர். அவற்றுள் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன இயற்பாக்களாகும். (தொல். செய்யு. 104). இசைப்பாவினை, இசைப்பா, இசையளவுப்பா என இரு வகைப்படுத்துவர். தாளமின்றிப் பாடப்படும் பாடல்கள் இசைப்பா என்றும், தாளத்துடன் பாடப்படும் சிந்துப்பா, சந்தப்பா, வண்ணப்பா, உருப்படி ஆகிய நான்கு வகைப் பாடல்களை இசையளவுப்பாக்களாகவும் இன்றைய இசையியலார் குறிப்பிடுவர்.

அகத்தியம், பஞ்சமரபு, பெருங்குருகு (முதுகுருகு), பெருநாரை (முதுநாரை), தாளவகை யோத்து போன்றவை பழந்தமிழ் இசை இலக்கண நூல்களாகத் திகழ்ந்தன. அவற்றுள் பல இன்று அழிந்துவிட்டன. அதன் தொடர்ச்சியாகத் தமிழிசை குறித்த பல்வேறு செய்திகள் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, அறம் உரைக்கும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவற்றில் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்றன. இவற்றுள் பரிபாடல், முழுவதும் பண்ணிசையை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது. மேலும், தமிழிசையில் 'பண்ணுப் பெயர்ப்பு முறை' பயன்படுத்தப்பட்டதற்குச் சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

தமிழிசை மரபானது தேவாரம், திருவாசகம் போன்ற திருமுறைகளாலும், திவ்யப்பிரபந்தங்களாலும் புத்துயிர் பெற்றது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் யாழ் வகைகள், குழல் வகைகள், மிடற்றுப் பாடல்கள், தாள வகைகள் ஆகியவை குறித்து விரிவான செய்திகள் காணப்படுகின்றன. மேலும், திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணி, சூளாமணி, கல்லாடம் போன்றவை இசை நுணுக்கங்களோடு, பண்களின் பாங்கையும் எடுத்தியம்புகின்றன.

சந்தப் பாக்களாலான திருப்புகழ்ப் பாடல்கள், பற்பல புலவர்களால் இயற்றப்பட்ட தனிப்பாடல்கள், தமிழிசை மூவர்கள் (முத்துத்தாண்டவர், அருணாச்சல கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை), 19, 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழிசைக் கலைஞர்களால் இயற்றப்பெற்ற கீர்த்தனைகள், சிந்துப்பாடல் வகைகள், பதம், தில்லானா போன்றன தமிழிசை மரபில் குறிப்பிடத்தக்கன. மேலும், சிற்றிலக்கியங்கள், தெம்மாங்கு உள்ளிட்ட நாட்டுப்புறப்பாடல்கள் என அனைத்திலும் தமிழிசையின் தொன்மையும் மரபுத் தொடர்ச்சியும் இன்றளவும் தமிழிசைக்குப் புத்தாக்கம் அளிக்கின்றன.

இத்தகு சிறப்புமிகு தமிழிசையின் பழமையினையும், மரபுத் தொடர்ச்சியினையும் ஆராய்ந்து அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் கருத்தரங்குகள், பயிலரங்குகள் போன்றன தமிழிசை வளர்ச்சிக்குத் தேவையான ஒன்றாகும். இத்தகு கருத்தியலின் அடிப்படையில் தமிழிசையின் நுட்பம், மரபிசை

முறை, தனித்தன்மை, வளர்ச்சி நிலை ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இப்பயிலரங்கை நடத்துகிறது.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். பயிற்றுரை, செயல்முறைப் பயிற்சி என்ற இரு நிலைகளில் பயிலரங்கம் வடிவமைக்கப் பெற்றுள்ளது. தமிழிசையின் ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் இசைத்துறை, தமிழ்த்துறை சார்ந்த ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களை இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 30
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **14.05.2026** முதல் **20.05.2026** **வரை 7 நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **காலை 10.00 - 01.00 வரை, பிற்பகல் 02.00 - 05.00** வரை
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/yAH1aAXP8BnSKSSKA என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 07.05.2026. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 08.05.2026 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**